
அன்பின் குடிலில்
நடந்த
ஸத் ஸங்கம் !!!
இதழ் II
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா





# அன்பின் குடிலில் நடந்த ஸத் ஸங்கம்!!!

இதழ் II

# பொருளடக்கம்


1. சொல்லற சும்மா சுகமாக இரு - விளக்கம்---------------7௨

௨. யோகி மற்றும் ஸித்தருடன் உரையாடல்-------------------௯௩

௩. திடஞானியின் நிலை-----------------------------------------110

௪. யோகத்தின் பலன்--------------------------------------------1௩7


எல்லாம் நீ!



(72)


குறிப்பு:— இங்கு இரண்டும், ஒன்றான தன்மையிலே, அப்பைத்தியத்தின், உருக்கமும்! கண்ணீர் பெருக்கும்! எம் கண்ணனிடம் காணப்பட்டது. இனி இரண்டும், ஒன்றான நிலையில் வரும் ஸத்திய வாசகமே! எம் கண்ணன் **வாக்கு** ஆகும்! என ஸ்ரீ ஸத்குரு வஸிஷ்டர் சொல்லுகிறார் என உணரவும்.

(D) **பொறுமையாயிரு:**

ஸ்ரீ ஸத்குரு வஸிஷ்டர் பிரான்! எழுந்தார் நால்வரையும் ஸ்ரீ ரிபு மஹாத்மா! ஸ்ரீ உத்தாலகர்! கண்ணன்! பைத்தியம்! ஓர் நோட்டமும் விட்டார். என்ன தோன்றியதோ தெரியவில்லை

**ஹே தாச்சாரியனே! நீ!**


உன் திருவாய்மலர்ந்தருள்வாயாக என்றார்! அங்கு எம் கண்ணன்! இதை எதிர்பார்த்திருந்தது போல் எழுந்தான். அங்கு அப்பைத்தியம் உட்பட அனைவர் திருவடிகளிலும், ஒவ்வொருவருக்கும் ஸ்ரீபாத நமஸ்காரம்! சாஷ்டாங்கமாக செய்தான். எல்லோருடைய, **திருவடித்தாளி**னையும், தம் சிரம் மேல் தாங்கிக் கொண்டான். அப்பைத்தியத்தை மட்டும்! **இருகத்தழுவிக்** கொண்டான். அது சமயம் அவன் கண்களில், ஆனந்தக் **கண்ணீர்**! பனித்து இரண்டு, நின்றது, அப்பைத்தியம் கவனித்தது. உடனே தம் பெருவிரலால், அதை துடைத்து அதை தம் வாயில் தடவிக்கொண்டது.



# பொறுமை!


கண்ணன்:— ஓம் ஸத்குரு தேவா! ஸத்திய சொரூபா! ஸத்குருவாரியா! ஸாந்த ஸ்வரூபா! பராத்பரா! இது உண்மை புதுமையே! நீ இயக்குகிறாய்! இது இயங்குகிறது. வாக்கும் நீ! அதன் பொருளும் நீ! எல்லாம் நீயே! இது **ஸத்தியம்!** இது **ஸத்தியம்!** இது **ஸத்தியம்!!!** எம் ஆத்மானந்த, மஹாத்தான, மஹாத்துக்களே! எம்பாமா! சொன்ன கதைகளையே, உங்களுக்கு திரும்பவும் சொல்கிறேன். அவை அமிர்தம், எளிமைக்கும் எளிமை! இனிமைக்கும் இனிமை! கனி விழும் கனிவு! பணிவிலும் பணிவாகும்! கண்ணன் என்றபாபா! பாபா என்ற கண்ணன்! **வாசகம்!**

(1) எம் வரலாற்றில் நடந்த ஓர் சம்பவம்:— (சுருக்கம்) ஓர் சமயம், ஸ்ரீ மஹாத்மா துர்வாஸ மஹரிஷி! துவாரகையில் வந்து, கண்ணனே! இன்ன வார்த்தை என்று, சொல்ல முடியாது. குடும்பம் கூசும் வார்த்தைகளால் **கண்டபடி!** அப்படி இடி முழக்கம் போல், திட்டித் தீர்க்கிறார். அங்கு கண்ணன்! ஓர் மணி பொம்மை போல, ஆகிவிடுகிறான். சூடு! சுரணை! லட்சை! வெட்கம்! மானம்! ரோஷம்! எல்லாம் பஸ்பமாகி விட்டது.



எம் கண்ணனிடம் மனம் இல்லை நான்; ஆனால் உங்களிடம் மனம் இருக்கிறதே! அம்மனதை வைத்து, அவனிடம் மனம் உள்ளதாக நித்தரித்து இந்த உவமான கதை பேசப்படுகிறது எனவும்.

அங்கு என்ன உணர்வு வருகிறது என்றால்?:- **வாய்** இருக்கிறது. அது பேசுகிறது. **காது** இருக்கிறது. அதை கேட்டே ஆக வேண்டும். ஆனால், **அர்த்தம்** **அனர்த்தம்** ஆகாமல், ஆனந்தமாக ஏற்றால் மட்டுமே, விகாரம் விவகாரம் அடையாது என நான் அடங்கி தத்துவனில் எல்லாம் நீயே என கவிழ்த்த **பொறுமை** ஆக்கி அதே ஸ்ரீ துர்வாஸர், கண்ணனின் மனைவி ருக்மணியை **எனக்கு** கொடு என வாங்கி அவர் மீது குதிரை சவாரி செய்கிறார் ஸ்ரீமஹாத்மா, இது என்ன பாடம் என்றால்? விட்டுக் கொடுக்கிறார்? அல்லது **எனது** என, சொந்தம் பாராட்டுகிறார் என்றும்? நாம ரூப, ஜகத் ஜீவ, தேவர்களை, பதுமையாக உணர்கிறார்? இது நடை பெற வேண்டிய, ஓர் திட்டமிட்ட நாடகம் என, மதிக்கிறார்? இல்லை, மான ஈனம் கொண்டாடி மனம் சலிப்படைகிறார்? என கண்ணனையே, **மனதுக்கு** (கண்ணனிடம் மனம் இல்லை நான் உங்களிடம் இருக்கிறதே ஆகவே உங்களுக்கு) ஓர் பாடம் நடைபெறுகிறது. இதை எல்லாம் நவமே! என்ற **பொறுமையால்** தான் சாதிக்க முடியும்.






உ

ஓர் ஆண்மீன் (அறிவு) ஓர் பெண்மீன் (புத்தி) இதை வைத்து, ஓர் கதை உண்டு இதன் விளக்கமாவது?

அறிவு என்பதான், சாந்திசமாதானம், சொன்னாலும், புத்தி அதை கேளாது! அதை கேட்க முடியாது! கேட்பது பொருந்தாது. எப்படி என்றால் சூட்சும ஸ்ருங்கபாணி சுட்டிக்காட்டி, உண்மையை உணர்த்துவது அறிவு! கண்ணுக்காணும் தூல நாமரூப ஜகத் ஜீவ, பொருள் போக்கு வரவாலும்! கொடுக்கல் வாங்கலிலும்! சிக்கி இருக்கும் மனமானது! தனது, பலகால பழக்க வழக்க! தோஷத்தில் ஆழ்ந்து போயிவிட்டதால், அறிவானது, சலிப்படையாமல் (சலிப்பு அடைந்தால், அது அறிவாகாது) திரும்ப திரும்ப! நம் இயல்பான ஸத்திய தர்மத்தையே! போதித்து அதை ஸ்தாபிப்பதே பொறுமை அவசியம் பொறுமையே ஜயிக்கும். ஆமென்.



(3)

ஜலத்திலே விழுந்த ஓர் **தேள்**! (கொடிய விஷமும் ,, குணமும் உடையதானலும்.)

உயிருக்கு போராடுகிறது. அதை ஓர் அன்பர் காருண்ய (ஜீவ) நிலையால், காப்பாற்ற, முயற்சிக்கும் போது, அந்த தேளால், பல முறை, கொட்டு வாங்கி, அந்த அவஸ்தையை, ஆனந்தமாக ஏற்றுக் கொள்கிறார். அவர் கூறும் அறிவுரை!

நேர் என்ற அந்த **ஜீவன்**! தன்னுடைய, விஷத்தையும்! விஷகுணத்தையும்! விடுவதில்லை! விட முடியவில்லை! விட இயலவில்லை! அது அதன் சுபாவமாகி விட்டது!


ஆனால் **யாமோ**! **அறிவோடு** கூடியவன்! அறிவேயாம்! யாமே அறிவு! எம் லட்சணமாகிய, பொறுமையை! எவ்வாறு இழக்க முடியும்? தீங்கு செய்தவனை **மன்னி**! அத்தீவினை **மற**! அது மட்டுமல்ல, அவனுக்கு ஓர் **நன்மையை** செய். இதுவே, எம் **பொறுமை**யின் சாதனையாகும்.



(77)

இதை அன்புக்கும்
அகங்காரத்திற்கும்
நடக்கும் போட்டி
எனவும் சொல்லலாம்
பொறுமைக்கும்
பொறாமைக்கும் நடை
பெறும் போட்டி எனவும்
சொல்லலாம். ஆனால் அன்பும் பொறுமை
யுமே ஜயிக்கும். அகங்காரமும் பொறாமையும்
முடிவில் அழியும்.

(4) ஒரு ஸ்ரீமஹான், கங்கையில், ஸ்நானம் செய்து வரும் சமயம், **பொறாமை**யால், அறிவிழந்த ஒருவன், தாம்பூல எச்சிலை, அவர் தலைமீது உமிழ்கிறான். அவரோ தலையைத் தூக்கிப் பார்த்து, இது தாம்பூல எச்சில், என தெரிந்த நிலையில்; இது எங்கிருந்து? யார் செய்தது? என **கூர்ந்து** விசாரணை செய்யாமல்; இது **நம்** ஸ்ரீபகவான் செயலே, நம் ஸ்நானம் செய்தது சரியில்லையென, ஸ்ரீபகவான் கருணையின் கருத்து போலும்? என ஆனந்தமாக உணர்ந்து, அவனை ஏறிட்டுப் பார்க்காமலும், ஏன் என்று கேட்காமலும் ஸ்நானம், செய்து விட்டு வருகிறார், அந்த ஸ்ரீமஹான். அவனும் திரும்ப திரும்ப உமிழ, இவர் திரும்ப திரும்ப ஸ்நானம் செய்ய, இப்படியே, **100** நடவைக்கும் மேலாக, ஸ்ரீபகவான் கருணையால் நடந்து, இங்கு **அன்புக்கும், அஹங்காரத்திற்கும்,** கடும் போட்டி ஏற்பட்டு அஹங்காரம் நாசமாகிறது.




பொறுமையின்
அன்பு! ஜெயம் அடைகிறது. இந்த உண்மையின் முடிவு:-

(A) இங்கு அஹங்காரம் என்ற, பொறுமை!

எப்படி வீழ்கிறது என்றால்?

அவன்:- ஸ்வாமிஜீ! ஸ்வாமிஜீ! என ஓடி வந்து, அந்த அன்பரின் திருவடியில், அடியற்ற மரம் போல் வீழ்ந்து, கூறியவண்ணம், பிரபோ! நான் இதுவரை, தெய்வத்தை நேரில் எங்கும், பார்த்ததில்லை. ஆலயங்களில், கல் தான் இருக்கிறது. வீடுகளில்! படமும் பொம்மையும் தான் இருக்கிறது. அங்கு நேய் வந்ததை காணோம் இங்கு, இன்று, இந்த குடிலில், கருணையின் பொறுமையின் சிகரமாக, திருவையின் கருணை நிதியாகிய, தாங்கள் ஸ்ரீ பகவானைத்தான் தரிசிக்கிறேன் என, ஆணவம் வீழ்ந்து முடிந்தது.

(B) இங்கு அன்பு என்ற, கருணையின் நிதியில், ஸ்வயமாகவே, பொறுமை! எப்படி பிரகாசிக்கிறது என்றால்?





அவர் :— ஹே தயாநிதி! கிருபா ஸாகரா! இந்த எளியேன்! காசியில் கங்கையில், ஒருவேளை நான், ஸ்நானம் செய்வோம். இன்று உன்னுடைய அளவற்ற, கருணையில்/ 108 முறை/ ஸ்நானம் செய்து வைத்து விட்டாயே! நீயல்லவோ ஸ்ரீபகவான்! நீயல்லவோ ப்ரத்யக்ஷ தெய்வம்! என அவனைப் போற்றி பணிந்து, அவன் திருவடியைப் பற்றி/ கதறி அழுகின்றார் இவர். இதிலிருந்து உணர்வதாவது?

பணிவே பாதையாக கொண்டால், கருணையே வடிவான தெய்வமும் பணிவிடை செய்யும் என ஸ்ரீ அனுபவ மஹான்கள் சொல்வர். நீ பணிந்தால், உலகம் உன்னுள் பணிந்து அடங்கும். நீ நிமிர்ந்தால், உலகம் உன்னை அடக்கி அழித்துவிடும். பணிவு! கனிவு! இனிமை! எளிமை! இவை பொறுமையின் கவசம் ஆகும்.

(6) ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகளுக்கு, ஓர் விவசாயி/ ஒரு வண்டி கரும்பு, கொடுத்தான். ஸ்வாமிகள் வரும் வழியில், கேட்கும் குழந்தைகளுக்கும்/ கோராத குழந்தைகளுக்கும்/ கூப்பிட்டு, கூப்பிட்டு/ ஸ்ரீபகவன் நாமாவை சொல்லி, சொல்லி, தர்மம் செய்து விட்டார். கடைசியில்,



ஒரு கரும்பே மிஞ்சியது. அதை கையில் பிடித்து,
கொண்டு வரும் போது, ஸ்ரீ பகவானை இரு குழந்தைகள்,
அனுப்பி, இரண்டு கரும்புகளையும், எடுத்துக் கொண்டான்.
ஸ்ரீ துகாராம் மனைவி கமலா! வீட்டு வாசலில் நின்ற வண்ணம்,
இவைகளை, கவனித்துக் கொண்டே இருக்கிறாள். அவளுக்
கும், இரண்டு குழந்தைகள் உண்டு. ஸ்வாமிகளுக்கு

அந்த **உணர்ச்சியே** இல்லை! தம்

சரீரமே, பிடிப்பில்லாதிருக்கும் போது எதை எண்ணப் போகிறார்?
மீதம் இருந்த, ஒரு கரும்பை, தம் மனைவியிடம், அன்பாக,
அம்மா கமலா! இதோ வாங்கிக் கொள். இதுதான்

**நம் ப்ராப்தி!** என, அன்பாக கொடுத்தார்.

ஆத்திரத்திலும்! வேகதாபத்திலும்! கோபாவேசத்திலும்!

**பொறுமையால்** நொந்து வெந்து, போயிருந்தவள்,


அக்கரும்பை வாங்கி, நுனிக் கரும்பை, தான் பற்றிய வண்ணம்,
கனமான **தடிக்** கரும்பால்! ஸ்ரீ ஸ்வாமிகளின்
முதுகைத் தவியாய், அருகே ஓங்கி ஓர் அடி அடித்தாள்.



(81)

துகாராம் ஸ்வாமிகளின் பொறுமையானது பல பல வருஷமாக உரம் ஏறிப் போன அகங்கார ஆணவத்தை மூலத்துடன் தெறித்து நாசம் செய்துவிட்டது. ஆகவே பொறுமையின் பெருமையை திரிகரணத்தாலும் உரைக்க முடியாது.

அடிக்க அடியில், கரும்பு இரண்டு துண்டானது. ஒரு துண்டு, அவர் கையிலும், மறு துண்டு தரையிலும் விழுந்தது. அங்கு ஸ்வாமிகளுக்கு, **ஆனந்தம்** உண்டானதே தவிர, **ஆத்திரம்** அணுவளவும் வரவில்லை. இதுவே **பொறுமையின்** பெருமையாகும். அந்நிலையிலும், ஸ்வாமிகளின் வாக்கானது:- அன்பான எம் கமலா! உன் பஞ்சினும் மெல்லிய கரங்களால் **பாறை** போன்ற, இத்தடியால் அடித்து, **சரிபாதியாக** ஒடித்து விட்டாயே? நீயல்லவோ கெட்டிக்காரி! என அவரை புகழ்ந்து, உடைத்தவளாம் உனக்குப் பாதி! எனக்குப் பாதி! என்றார். இங்கும் அருகில் உள்ள, குழந்தைகள் எண்ணம் வரவில்லை. காரணம்? **மூர்க்குண சக்தி** சிதறடிக்கப்பட்டது. அதனால் **நற்குண சக்தி** மேலோங்கியது.




ஒன்றை கொடுத்தால் தான் ஒன்றை வாங்க முடியும்.
அதைப் போல, எம் ஸ்ரீ துகாராம் அவர்கள், தம்மிடம்
உள்ள:- அன்பு! கருணை! பணிவு! கனிவு! இனிமை!
இவை அனைத்தின் பிறப்பிடமான **பொறுமையை!**
கொடுத்தார்.

அவரிடம் உள்ள:- அகங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்!
உடைமை! உரிமை! அபிமானம் (சூடு, சுரணை, வட்கை, வெட்கம், மானவமானம்) ஆகிய **பொறாமையை!**
பொறுக்க இயலாமையை எடுத்து நாசம் செய்தார்.

அடுத்த பிறவி கமலா! கமலாவாக இல்லை!
" மலமற்ற **அமலாவாக**
மாறி விட்டார்.

(6) இத்துடன், பொறுமையை நிறைவு செய்கிறோம்.
இதைப் படிக்கவோ! படிப்பதை கேட்கவோ! உங்களுக்கு
**பொ று மை** வேண்டும்.

ஓர் உண்மையின் வைத்தியமானது! அதன் **விதி**
வசத்தால் அமைந்த மனைவியின் தாயைப் பெற்ற பெண்பாலை
யிடம்! **கடும்! சுடும்! கட்டு!** சம்பந்த
வார்த்தையின் **சூடசரவைபடிகள்!**




சுடு சுர வெடிகள் எனக் கூறுவது, (83) வார்த்தைகளை, வசூர்ச்சனை யாகவும்! அதன் அர்த்த பாவனைகளை, பாஞ்சலியா பூஜ் ... ஆனந்த மாக ஏற்றல் ஆகும்.

ஒரு சாமிக்கு ஜெபம் கொண்டு கொடுத்த அதை முழுவதும் சாப்பிட்டபின் கவும், அமைதியான் ஆனந்த


பூரமாரியாக, ஓர் அரை மணி நேரமாவது, விசுமரம். அங்கு அந்த வைத்தியம், மானவமானம்! சூடு! சுரணை! வட்டை! வெட்கம்! இவைகளை, அந்த சுடு சுர வெடிகளின்

**அக்கினியில்!** சாம்பலாக்கி விட்டு, அக்குழந்தை இனியும் பேச முடியாமல், துவண்டு! சோர்ந்து! அயர்ந்து! வியர்த்து! நலிவடைந்த நிலையில் அருகில் சென்று அமர்ந்து இனிய மொழியில் அம்மா! மிச்சம் மீதி இருந்தால் அதையும் கொட்டி விடு. ... அதை உன்னால் ஜீரணிக்க முடியாது!!! என அன்போடு கேட்கும் போது, அக்குழந்தை கடைசியாய் ஓர், (திவ்யாஸ்திரம் தொடுக்குமாம்)


"சொன்னாலும் சுரணையில்லை! சுட்டாலும் நாற்றமில்லை!!" அது அந்நபன் ஓய்வாகி விடுமாம். அதை தூக்கி, கட்டிலில் விரிப்பு தலையணை இவைகளில், படுக்க வைத்து விட்டு, விசிறி கொண்டு ஓர் 10 நிமிடம் வீசி, அது தூக்கத்தில் ஆழ்ந்த பின் **பாவம் அறியாமையின் குழந்தை, நலம் பெறுவதாக!** என வாழ்த்தி விட்டு, அம்மைத்தியம் சும்மா சுகமாயிருக்குமாம், இதுவும் **பொறுமையின்!** சோதனைக்காட்டாகும்.




ஓம் ஆத்மானந்த குழந்தைகளே! இந்த பொறுமையை! **முழுமையாக** அனுபவித்து உணர்ந்தவர்! எவரும் இல்லை என்றே சொல்லுவோம்! எவரிடம் கேட்டாலும், அப்பொறுமையில்! என்ன **பெருமை!** இருக்கிறது என்றும்? பொறுமை என்பதே இயலாத்தன்மை! என்றும்! அது சோம்பல்! என்றும்! கையாலாகாதவன் வேலை! என்றும்! ஓர் அசட்டுத்தனம்! என்றும்! பிழைக்க தகுதியற்றவன்! என்றும்; புத்தி இல்லாதவன்! என்றும்; இன்னும் பலபல, நிலைகளில் அவர்கள் **புத்திசாலிகள் அறிவாளி**கள் அவ்வு வர்ணனை செய்வர். இது அவர்களுக்கே, உரிய **கலி** காலமாகும்! ஆகவே அவர்களிடம், எந்த வாதமோ! பிடிவாதமோ! தர்க்க குதர்க்கமோ! பண்ணவேண்டாம்! என்று உங்கள் திருவடி பணிந்து, வேண்டிக் கொள்கிறேன் என பணணணணணணணணணிவுடன், உங்கள் கண்ணன்!




மேலும் கண்ணன் வாசகம்:-
அன்பான ஆத்மானந்த குழந்தைகளே! மஹாத்தான
மஹாத்மாக்களே! இதுவரை கூறிய, பொறுமையின்
பெருமையை! சொன்னயாம், ஸ்ரீபகவானாகவும்!
இருந்தும், கூறவில்லை! ஸ்ரீகீதாச்சார்யனாக,
**சாமான்ய குருவாகவும்!**
இருந்தும், கூறவில்லை! **பரசொரூப**
அம்ச **ஸத்குருவாகவே!** இருந்து
கூறினோம். என்பது ஸத்தியமே! ஏன் கீதாச்சார்யன்,
சாமான்ய குருவென்று, சொல்கிறோம் என்றால்
**கர்ம/பக்தி/யோகம்/ஞானம்!**
இவைகளை, முறையோடு, போதித்தோம்.
ஆனாலும், சுத்த அத்வைதத்தை! அங்காங்கு சுட்டிக்
காட்டினோமே தவிர! முழுமையாக போதிக்கவில்லை.
இங்கே நீங்கள் கேட்கலாம்? இப்போமட்டுமே என்ன
வாழ்கிறோம்? அத்வைதம் பற்றி போதிக்காமல்,



86

தர்மத்தின் உறைவிடமான!
பொறுமையைத்தானே போதித்தாய், எனக் கேட்கலாம்?
கர்மாவோ? பக்தியோ? யோகமோ? ஞானமோ? சுத்த
அத்வைதமோ? அது நிலைபெற, ஓர் பீடம்
வேண்டும். நிலைபெற்ற அது ஆனபின்பு,
பீடமும் இல்லை. அதன் மேல் ஸ்தாபனமும்
இல்லவே இல்லை. அங்கு, ஒன்றுண்டு ஒன்றில்லை! என்ற நிலையில்
(அது உண்டு நாமரூபம் இல்லை!) ஸ்வய அனுபவம் பெறலாம்.
அந்த பீடமே இந்த பொறுமை! ஆகும்.
அந்த பொறுமையே, அனைத்தையும் சாரும். இப்
பொறுமையை, உள் ஆழ்ந்து, உணர்ந்தால் தான்!
அனைத்து, ரகஸ்யார்த்தங்களும்
ஸ்பஷ்டமாகவும்! உறையவும் முடியும்! அதன் அனுபவ
மும், ஸ்வயமாக, எந்த பயிற்சியும்! முயற்சியும்!
இன்றி, இயல்பாக பெற முடியும், என்பதே ஸத்தியம்.




(87)

வேலைக்காரன்
அவனுடைய
எஜமான், என்பதை
அப்பா! புரிந்தென
வும் கொள்ளலாம்.
அப்படி கொண்டால்
தொந்த, பந்த, பாச, உறவு
தடை சம்பவம். ஆகவே
எஜமான் வேலைக்காரன் என
பார்ப்பதே முறை! இங்கு அந்த எஜமானுக்கே,
லாப நஷ்டம்! உனக்கல்ல என உணர். தொடரும்.

முடிவில், இவ்வொன்றை கூறி, நிறைவு செய்கிறேன்:

**நாமரூப ஜகம்** அனைத்தும் இல்லைதான்

ஆனால், **மனதால்** ஆட்டப்பட்ட உனக்கு,
இருப்புடையதைப் போல், தோற்றுகிறதே! இதை
என்ன செய்வது என, சற்று உள் ஆழ்ந்து உணர்.
அனைத்திலும், மேலான ஓர் சக்தி உண்டு! என்பது
பக்தன் முதல் பாமரன் வரை! விஞ்ஞானி முதல் அஞ்ஞானி
வரை! உலகின் அனைத்து மனித ஜீவர்களும்!
அன்றும்! இன்றும்! என்றும்! என்றென்றும்!
நம்புகின்றனர். நம்பித்தான் தீர வேண்டும். அதுவே
ஐதீகமாகிவிட்டது.
அப்படிப்பட்ட, ஓர் மகத்தான சக்தியின், உருவாக்கமே
இவ்வுலகமும், அதன் பொருள்களும், என்பது சத்தியமே.
இதை உன் நிலையில், ஓர் தோற்றமாக உணர்.
அந்த மகத்தான சக்தியே, உன் **எஜமான்**!
நீ அவனில், ஓர் **அங்கமே**! ஆனாலும், இன்று
நீ ஓர் வேலைக்காரன் என, வாக்கியமாக வைத்துக் கொள்.
(பின்னர் அவனே நீயாவாய்! நீயே அவனாவாய்)



(88)

அப்படியானால் அனைத்து நாமரூப பொருட்களும் அவனுடையதே. எடுத்து விளையாடு. அதன் லாப நஷ்டத்தை கஷ்டம் / துக்கம் / துன்பம் வறுமை / பிணி / இவற்றின் உபாதை அவனுடையதே! அது எனது என்று உடைமையும் உரிமையும் பாராட்டுவதால்தானே துன்பம் அடைகிறோம். எல்லாம் நீயே என அவனிடம் விட்டுவிட்டு நம் ஆனந்தமாக சுகமாக இருக்கலாமே! முடிந்தது.

வேடிக்கைகாரனாகிய உனக்கு, உலகின் அனைத்து பொருள்களையும்! **பொது உடைமையாக்கு!**

உன்னைத் **தனி உடைமையாக்கு!**


எம் அன்புக் குழந்தாய்! இவை அனைத்தும் எம்முடைமை!

ஆனால்? உனக்கு **விளையாடவே** கொடுக்கிறோம்

" **விளையம்சொந்தம்** "

கொண்டாட, கொடுக்கவில்லை என்றும். **உடைமை**யும் **உரிமை**யும்! (நான்! என்னால்! எனது! என) பாராட்ட வேண்டாம் என்று தான், கொடுத்தான். ஆனால் இந்த விளையாட்டிற்காக, நம் அகில மாயாவின் **மனதை**யும், கொடுத்தான். அம்மனம் இல்லையானால், நீ விளையாட முடியாது, என்பதும் சத்தியமே. இங்கு?

**நீ** அவனுடைய பொருளாக அம்மனதால் பாராட்டி விளையாடினால், அம்மனம் **உன்** வசம் அகப்படும். மாறுக?



பொறுமை:— (89)
பொறுக்க
இயலாமையே பொறு
மையாகும். பிறருடைய
நல்ல நிலையைக்கண்டு
மனம் பொறுக்காமல்
வெந்து வெந்து தான்
சாவதும், அவர்களை
அழிக்க தயங்காமல்
விரோத குரோத வஞ்சக
செயல்களால் ஈடுபட்டு அவர்களை அழிக்க
முடியாமல் தான் அழிந்து போவதே பொறுமை
ஆகும்.


நீயோ, இது என் பொருள், நான் தேடினேன், என்ற
பொருள் மோஹ சக்தித்துவம் கொண்டதால் அம்மனம்
உன்னைப் பற்றிக் கொள்ளும்.
இதன் ரகசியம்?

மனம் உன் வசம் இருந்தால், வினை இல்லை.
,, ,, ,, ,, புண்ணியபாபம் ,, .
,, ,, ,, ,, ஜனனமரணம் ,, .
மனம் வசம் நீ இருந்தால் வினை உண்டு.
,, ,, ,, ,, புண்ணியபாபம் ,, .
,, ,, ,, ,, ஜனனமரணமும் ,, .

இதன் முக்கியம்?

உடைமை உரிமையால், அஹங்கார, அதிகார,
ஆதிக்க, அபிமான, வெறி உண்டாவது இயல்புதானே?


இந்த வெறியால் உண்டாவது:— காமம், மோஹம், லோபம்,
மதம், சந்தேகம், விரோத குரோதம், ஆக்ரோஷம், அவசரம்,
கோபாவேசம், படபடப்பு, கடும் வேகம், இவைகளால் கலக்கம்,
கலக்கம், பயம், துக்கம், உண்டாவது இயல்புதானே?



போட்டி:- (10)
ஒன்றுக்கொன்று நான் முந்தி! நீ முந்தி என முண்டியடித்துக்கொண்டு ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்காமல் ஆர்வம் என்ற நிலையில் ஆணவம் புகுந்துகொண்டு இருவரும் பலபல நிலைகளில் மோதி வெற்றி காணும் நிலையால் வெறி பிடித்து ஆடி அலைக்கழிந்து அழுகவே போட்டி ஆகும்.

மேலே கூறிய, உடைமை & உரிமையின்! வெறியால், அந்நிய குணங்களும் உண்டாக காரணமானது எது? எனக் கவனி:- **போட்டி & பொறாமை** ஆகும்.

பொறுமை என்பதே! பொறுக்க இயலாமை தானே? ஏன் பொறுக்க இயலவில்லை? எல்லாம் நானே! என்னுடையதே! என்ற ஜீவ தத்துவம் தானே காரணம்? இங்கு அம்மையாரேயே, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என ஓர் நாமரூப, ஸ்ரீ பகவானிடம், ஒப்படைத்து, உன் கர்த்தத்துவத்தை! அங்கு அவன் ஏற்றுக்கொள்வானே! நீக்கிவிட்டால், எல்லா பாரமுமே நீங்கி விடுமே? மேலே சொன்ன, சர்வாரம்பங்களின், மூல அடிப்படை **பொறுமை**யே ஆகும். ஆகவே தான், இந்த பொறுமையின் சாதனையை, எம் அன்பான பாபா! சொன்ன, பொறுமையின் விளக்கத்தை, **ஆறு** நிலைகளில் உணர்த்திடுவோம். இப் பொறுமையின் கருத்தே அத்வைதத்தின் **அடிப்படை**! ஆம்! பொறுமை இல்லையானால், அத்வைதம் நிலை பெறாது!



பொறுமை (91)
நியதியால்
ஒருவன் ஒருவர்க்கு
தீங்கு செய்தால்
அத்தீங்கு அதை செய்
தவினையே தாக்கும்.
அதாவது செய்த வினை
செய்தவினையே சாரும்.

சீரும் சிறப்பு
மாக நடைபெறு
கிறது. அதுவே வி...

அவனை ஒன்றும் செய்யாமலும் ஆனால் அவன்
இறை உணர்வோடு இருக்க வேண்டும்.
தொடரும்.

இக்கலியுகமானது, போட்டி & பொறுமையால், விளங்கவும் படுகிறது. வெற்றி என்ற, ஓர் **வெறி** யையும், உண்டு பண்ணி, ஜீவர்களிடையே ஓர் **மோஹ; வேகத்தையும்,** உண்டாக்கிவிடுவதால்; அதனால் பெறும்.

பணம், பட்டம், பதவி, பேர், புகழ், அந்தஸ்து, கௌரவம், முதலிய கலியுக, பண்பாடுகளான **ஸன்மானங்கள்,** அள்ளி, அள்ளி தருவது, போட்டி & பொறுமையாகும். (ஸன்மானம் = [illegible])

இறை கருணையின், நம்பிக்கையினால் **நம்மை** தேடி வரும், **பொறுமையால்** விளங்குவது

அன்பு, கருணை, காருண்யம், பணிவு, கனிவு, இனிமை, எளிமை, அடக்கம், நம்பிக்கை, வைராக்கியம், போதும் என்ற நிறைவு, குற்றம் குறைகளை மன்னித்தல், மறத்தல், நாம் விட்டுக்கொடுத்து விலகுதல், எதையும் நன்மை என ஏற்றல், இவைகளே இறைகுரு, கருணையால் பெறுவது, **பொறுமை** என்ற **ஸன்மார்க்கம்** ஆகும்.



அப்படி ஒருவன் (12)
செய்யும் வினை
இவனைச் சாரும் என்
றால் முன்பு இவன்
அவ்வினைக்குக் காரணமாக
இருந்திருக்க வேண்டும்.
அப்படி ஓர் வினை
இருந்தாலும், இவன்
சர்வார்ப்பணம் உறுதி
நிச்சயமானால் அவனியும்
கருமையின் வேகம் குறையும்
எப்படி
அது நானெல்லாம் போல் பணிந்து வணங்கவனிடம் இல்லை
காந்தும் ஒன்றும் செய்ய இயலாதோ! அப்படி பயன்
அந்தப் பேரன்பே. முடிந்தது

இதுவே **பொறுமை**யின் **பெருமை** ஆகும்.

இதுவே எம் **அத்வைத** போதனையாகும் என,

ஸத்குருவாகிய கண்ணபரமாத்மா நிறைவு செய்தார்.

அனைவரும் எழுந்து, ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்

செய்தோம். பின் அனைவரும், ஒருவருக்கொருவர்,

ஸ்ரீபாத நமஸ்காரம் செய்தோம்.

**ஸத்குரு**வாகிய கண்ணபரமாத்மா மழையமடி,

எம் குட்டிக் **கண்ணன்** என ஆனார்.

**மறுநாள்**

அதிகாலையில், மேட்டூரில், பல வருடங்களுக்கு,

முன்னால். சந்தித்தவர்களில், ஓர் **யோகியும்**

ஓர் **ஸித்தரும்** சந்தித்து, ஓர் ஸத்ஸங்கம்

நடத்தினர். அவ்விருவருடனும், இப்பைத்தியமும்


எமதய்யன் திருடன் கண்ணனும் உடன் இருந்தான்.

அவ்வுரையாடலில், சில முக்கிய நிகழ்ச்சிகள்

வெளியாயின. அதை அடுத்தமாதத்து இதழில்.

கருத்தால் உணர்க. முடிவில், ஸ்ரீவேத வியாச பகவான் (ஸத்குரு)


வந்து, இவ்ரகஸியம் வெளிப்படுத்தி, ஸத்ஸங்கம் நிறைவு பெற்றது.






ஸத்ஸங்கம் நடந்த இடம்:— அன்பின் குடிலில்,
ஓர் வைத்தியம் படுத்திருந்த இடம்.
பங்கேற்போர்:— ஓர் ஸ்ரீ யோகி! ஓர் ஸ்ரீ ஸித்தர்!
எம் கண்ணன்! இவர்களுடன், ஓர் வைத்தியம்!
காலம்:— அதிகாலை ௨ மணி!

அதிகாலை இரண்டு மணி அளவில், இடப்பக்கம் இருந்து வலப்பக்கம் திரும்பி படுத்தது. அது சமயம், ஓர் **சூட்சும உணர்வு** தோன்றியது. அவ் வைத்தியத்தின், பாதங்களின் அருகே, அப் பாதங்களை, தென்றலாக, வருடும் ஓர் உணர்வு! தோன்றியது. ஸ்பரிச உணர்வு என, உணர்ந்ததும் நாராயணா! நாராயணா!! என்று இருமுறை, ஸ்மரித்த வண்ணம், பாதத்தின் பக்கம், சற்று சுற்றி நோக்கியது. சூட்சுமமாகவும்! தோற்றம் **நிழல்** வடிவமாகவும்! இருவர் இருப்பதாக தோற்றியது. யாம் அது யார்? என கேட்கும் முன்பே, அவர்கள் முந்திக்கொண்டார்கள். அவ்விருவரும், இணைந்த குரலில்:— பிரணாம் பாபாஜீ! பிரணாம் பாபாஜீ! என்றார்கள். அக்குரலில், தழுதழுத்த (அழும் நடை) குழைவும்! ஏக்கம்! உருக்கம்! தரிசன இச்சையும் கலந்திருந்தது. ஆர்வம்!



(ஓம்)

பைத்தியம் மெதுவாக எழுந்து, அமர்ந்து அவர்களை,
**உணருவி** நோக்கியது. அவர்களை
இன்னார் என, உணர்ந்து கொண்டது ஓகோ! ஓகோ!
**டேம்யோக, ஸித்தர்கள்** தானோ?
என்றேன். முன்பே பைத்தியத்தின் பயணத்தில், படித்
திருப்பீர்கள். மேட்டூர் நீர்த்தேக்கத்தின், உள்
இருந்து, இருவர் வருவார்கள்! என்பது ஞாபகம்
இருக்கலாம். இவ்விருவரும், சுமார் பத்து வருடங்
களுக்கு முன்பே, நாங்கள் ஹிமாலயா செல்கிறோம்.
என விடைபெற்று சென்றுவிட்டார்கள். இந்த
மலையாத்திரையில், நடந்த மூன்று/ஸத் ஸங்
கங்களிலும், இவ்விருவரும், கலந்து கொண்
டார்கள். அம் மூன்று காலங்களிலும், எதுவும்
கேட்கவும் இல்லை. அருகில் நின்று வண்ணம்
**ஸத்தான** உரையாடல்களை, வெகு கவன
மாக கேட்டார்கள். கண்களில் கண்ணீர் கரை
புரண்டோடும். அதைத்தம் விரல்களால், துடைத்த
வண்ணம், கூட்டத்தில் ஆழ்ந்துவிட்டதை மட்டுமே,
இப்பைத்தியம் கவனித்தது. இதுவே அவர்கள்,
பரிச்சயமானது.






வைத்தியம்:— நாராயணா! நாராயணா! நவம் பெயர்களாக! நவம் பெயர்களாக.

ஸ்ரீ ஸித்தர்:— எங்களை, ஞாபகம் வைத்திருக்கிறீர்களா பாபாஜீ!

வைத்தியம்:— மெய்யன்பர்களே! உங்கள் வாக்குப் படி, ஞாபகம் வைக்கும் **மனம்** இல்லைதான். ஆனாலும், பேதமில்லாமல் உணரும், **அறிவு** இருக்கிறது. அதை வைத்து உணரமுடியும்.

ஸ்ரீ யோகி:— ஹேபாபா! அறிவு உணரும் போது, நாமரூபம்! தோன்றுமா? தோன்றாதா?

வைத்தியம்:— அறிவால் உணரும் போது, அவசியம் நாமரூபம்/தோன்றுதான். ஆனால் அந்த அறிவால், **வினை/மனம்/** இவ்விரண்டையும், உணரலாம். எமக்கு உங்கள் நாமரூபம்/தேவையில்லையே/ உங்கள் வினையும்/மனமும்/ எப்படி உள்ளது என ஓர் **விஷயங்கள்** உணர்ந்து விடலாம். அதை வைத்தே, என்ன பேச வேண்டுமோ? என்ன செய்ய வேண்டுமோ? அதை அச்சடிமாமே, செய்து விடலாம்.




அறிவாகிய ஆன்மாவாக இருக்கும் போது யாம் செயல்பட முடியாது. அறிவாகிய ஸ்ரீ பகவான் என ஆகும் போது எம் மாயாவின் உதவியால் செயல்பட முடியும். அந் நிலையாங்கான் ஹிரண்யகர்ப்பம்! மனதாயும்! எம் மாயாவால் உணர்ந்து அங்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யமுடியும்

96

ஸ்ரீ யோகி:- ஓ பாமா! இங்கு உங்களுக்கு, ஸ்ரீ பகவான் மாயாவோ! உங்கள் சக்தியின் ஸித்தியோ! தேவையில்லையா?

வைத்தியம்:- ஓ மஹாத்மா! மாயாவும் தேவை இல்லை! ஸித்திகளும் தேவையில்லை. அதன் ரகஸியம் என்னவென்றால்? எம் அறிவே ஆன்மா! ஆன்மாவே அறிவு! இந்த அறிவானது, மாயாவை கிரஹித்துக் கொண்டால், அந்த அறிவே! ஸ்ரீ பகவான் எனஆகிவிடும். இந்த அறிவு! நான் நானாய் தனித்து நின்றால் அதுவே, ஆன்மாவாக பிரகாசிக்கும். நானே ஆன்மாவாக, பிரகாசிக்கும் போது, இந்த மாயாவும்! உங்கள் ஸித்திகளும்! செப்படு கண்கட்டி வித்தைகளும் எம் ஆன்மாவினுள் அடங்கிவிடும். பிறகு மாயா ஏன்? ஸித்திகள் ஏன்?




நாமரூபம்
இது இன்னார் (97)
இது இவை என
பேதப்படுத்தி தூல
மாக காண்பது
**மனம்** ஆகும்.
நாமரூபம் தோன்றாமல்
அனைத்தையும் பதுமையா
இல்லாமல் அதன் வினை இயக்க
கவும் இனைபேதம்
மனம்மட்டுமே உணரப்படுவது **அறிவு** ஆகும்.

ஸ்ரீ ஸாதகர்:— அறிவால் வினையும்! மனதையும்! உணரமுடியும் என்றீர்களே! அப்படியானால், **இவர்! இன்னார்!** இவரிடம்தான் பேசுகிறோம்! இவரிடம் எப்படி பேசவேண்டும்? என்ற பேதம், தோன்றுமா? தோன்றாதா?

வைத்தியம்:— ஐயா மஹாபுருஷரே! எமக்கு நாமரூப பேதம்! தேவையில்லையே! ஆண்! பெண் இன்னார்! என்ற பேதம் அவசியம் தோன்றுது. அது தோற்றவும் தேவையில்லை? அது **மனதின்** விகார! விவகாரமே! எமக்கு வினை! மனம்! இவ்விரண்டுதான் முக்கியம். அவ்விரண்டையும் வைத்து, கணக்கு பார்க்கும் நிலையில், அறிவாகிய ஸ்ரீ பகவான் ஆவோம்! அதுவே விதிதேவதை அவ்விரண்டையும், விட்ட நிலையில், அறிவாகிய **ஆத்மா** ஆவோம்.

ஸ்ரீ யோகி:— அப்படியானால், இந்த ஜீவர்களின் கணக்கு வழக்கு, உமக்கு தேவையில்லையா?




ஓர் ரகஸ்யம்! (98)

அறிவே ஆன்மாவாகவும், அறிவே ஸ்ரீ பகவானாகவும் நிற்கும் செயல் மட்டும். ஆனால் இரண்டும் ஏக வஸ்துவில் ஒன்றாகும். அறிவே ஆன்மாவாக இருக்கும்போது அதுவே இயக்கமற்ற தன்மையால் சாட்சி ஆவோம். அதற்கு சாட்சி சைதன்யம் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

தொடரும்

வைத்தியம்:— அது ஸ்ரீ பகவான் காரியம். அதுவும் அவன் **மாயாவின்** காரியமானதே யாகும்! ஸ்ரீ பகவானை இருக்கும் வேதியம்! அம்மாயானவை, தொடாமல், விலகு மனதின் **தன்மையை** அறியாத உணர்வோமே தவிர, அதை வாக்கால் புலம்பவும் மாட்டோம், அங்குமே வாக்கு, மஹா மௌனத்தைத்தான் அனுஷ்டிக்கும். அப்படியும், வாக்கு வந்தால், **பரம் இறை! கருணையாக!** வரும். அது எம்மையும் பாதிப்பதில்லை. அச் ஜீவர்களையும் பாதிப்பதில்லை. அந்த பரம் இறை! கருணையென்பது, மஹா ரகஸ்யமானதே. அது வாக்குக்கோ! வரி வடிவுக்கோ! எட்டாத ஒன்றாகும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம். சரி! சரி! அது இருக்கட்டும், தாங்கள் இருவரும், இந்த ஏழையை, தேடி வந்த காரணம் என்னவோ? அதை தெரிந்து கொள்ளலாமா?



அறிவே ஸ்ரீபகவான் (99)
எனஆகும் போது
அங்கு மனமும் இல்லை.
மாயாவும் தேவையில்லை
அங்கு **அறிவு**மாக
வும் தீக்ஷண்யமாக இரு
ப்பதால் அதுவாவது **ஸித்தி**

தேவகை இருந்து அவரவர் விதி
ஆறையும் அது அபரிக்கிறா
யும்! எமனை வரும்!
பாவம் பதில்லை.
மனது இனவகைமட்டமே உரைத்து அங்கு என்ன
செய்ய முடியுமோ அதை செய்யவும் முடியும் என
ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
முடிந்தவை.

ஸ்ரீ ஸித்தர்:— ஹே பாபா ஜீ! நாங்களும்! எங்களை சார்ந்தவர்களும்! நாங்களிடம்! பெரிய அபராதம் செய்து விட்டோம்! அதன் மன்னிப்பு பெறவே, எங்கள் அனைவர் சார்பிலும், நாங்கள் இருவரும் வந்துள்ளோம்?


வைத்தியம்:— கடகடகட கடகடகட கட வென சிரித்துக் கொண்டே! அபராதமா? மன்னிப்பா? இதன் அர்த்தம் என்ன?

ஸ்ரீ ஸித்தர்:— என்ன பாபா! இப்படி கேட்கிறீர்கள்?

வைத்தியம்:— பின்னே என்னவாம்? அபராதம் என்றால் என்ன? மன்னிப்பு என்றால் என்ன? யார் யாருக்கு அபராதம் செய்தது? யார் யாரை மன்னிப்பது?

**எமக்கு** அன்னியமாய்! ஒன்று இருந்தால் அல்லவோ! அபராதமும்! அதற்கு மன்னிப்பும் உண்டு! எல்லாமே யாமாக இருக்க! எமக்கு அயலாக, எதுவும் இல்லாதிருக்க, உங்கள் வார்த்தைக்கு, இடமே இல்லையே! என் செய்வோம்?

அவ்விருவரும், அதன் பாதங்களில் பணிந்து கொண்டு, கசிந்து உருகிய வண்ணம் சொன்னதாவது?




இப்படி பணிவின் நிலையை நாங்கள் என்று, பெறப் போகிறோமோ பாபா! எங்கள் அஹங்காரமும்! அதிகாரமும்! ஆதிக்கமும்! எங்கள் **அறிவு**க்கண்ணை மறைத்து **மன**க்கண்களை திறந்து, **வேகபோதையில்** ஆழ்த்தி விட்டதே பாபா! உம்போன்று, நேர் **விடையேதும்** ஆனந்தமாக, இருக்க முடியவில்லையே பாபா! என் செய்வோம்? என்றார்கள்.

(போதை – 197 வது பக்கம் பார்க்க)

அந்த ஏழைப் பைத்தியம், அவ் இருவரையும் ஆரத்தழுவி, முத்தமிட்டு, அதுவாக இருந்தது.

அயர்ந்தோம்! சோர்ந்தோம்! கலங்கினோம்! தெய்வங்கள் **மனைவியே**! உங்கள் மனதை, அடக்கி வைத்திருக்கிறீர்கள். அது **வீறு** கொண்டு எழுந்தால், ஓர் ஜீவனைப் பிடித்தால், பாடாய் படுத்தும். கவலைப்பட வேண்டாம் அன்பர்களே! விடயத்தை சொல்லுங்கள்? என்ன அபராதம் செய்தீர்கள்? எதற்காக, இந்த ஏழை பைத்தியம் மன்னிப்பு கொடுக்க வேண்டும்???




(101)

ஒருவரை ஒருவன் புகழும் போது தான் அவனுக்கு குழி பறிக்கிறான் என கொள்ள வேண்டும். அங்கு புகழ்பவனும் அழிவான். புகழ்ச்சி பெறுபவனும் அழிவான். அது அஹங்காரம் என்னும் பரஞானம் என ஸ்ரீ மகான்கள் சொல்வர்.


ஓர் ஸ்ரீ மகாத்மா சொன்னார்:- ஹே பாபா ஜீ! சுவாமி, பத்து வருஷங்களுக்கு முன்பு, நாங்கள் அனைவரும் நாங்கள் மேல்குறிப்பில் சந்திக்கவே போல தெய்வாம் கேலியும்! கிண்டலுமாக! பலபல பேசியிருக்கிறோம். அந்த நேரமும், அனுஅளவும், சீற்றமோ! கோபமோ! அருவருப்போ! அவசூயமோ! நாங்கள் செய்ததில்லை. அன்று கண்ட **புன்னகை**யும்! ஆனந்த **சிரிப்பும்**! இன்றும் அணுவளவும் மாறவில்லை. மறையவில்லை. குறையவில்லை.

**காரணம்** { நாங்கள் ஆத்மஞானி! நாங்கள் வாய் ஞானி!

அந்யோன்யம் இடைமறித்து; போதும்! போதும்! இப்படியே பேசிக்கொண்டே போனால், எம்மைக் காண முடியாது! நீங்கள்! இது உறுதி!

புகழுரை சொல்பவன், சொல்லி சொல்லி அழிவான்


புகழுரையை கேட்பவன் கேட்டுக் கேட்டு அழிவான்.





நீங்கள் வந்த காரியத்தை, யாமே சொல்கிறோம்
முன்பு நீங்கள் அனைவரும், இந்த ஏழையை,
சந்திக்கப் போ சொல்வாய், உங்கள் வாசகம்,
எப்படி வரும் என்றால்?

ஹே பாபா! இங்கு இந்த, ஜீவர்களிடம், என்ன
செய்யப் போகிறாய்? இவர்களுக்கு நீ பாடம்
நடத்துவது, **கல்லில் நார்** உரிப்பது
போன்று, பயனற்ற காரியம் என்றும்; செவிடன்
காதில் சங்கு ஊதியது போன்றும்; கழுதைக்கு
உபதேசம், காதில் ஓதிறதும், அது **காள்!**
**காள்!** என்ற யுக்தியை விடாது என்றும்!
இங்கு இப்பாமர மக்களிடம், மட்டையடித்தது
(ஊரிக்கும்)
(கத்தி கத்தி அழுதது) போதும் என்றும்,
இன்னும், பலபல!, **அறிவுரை** கூறிவிட்டு,
முடிவில்! **நீயும் எங்களுடன்**
**வந்துவிடு!** என, எங்களுடைய அறியாமையின்,



அஹங்காரத்தையும்! ஆதிக்கத்தையும்! அதிகாரத்தையும்! எங்கள் செல்வாக்காகிய செயல்படுவித்தைகளையும் **ஸித்துக்களையும்** காட்டி, பயமுறுத்தும் நியாயற்ற ஆர்ப்பாட்டத்தையும், சொல்லி, அது ஒர் அபராதமென்றும், அதை யாம் மன்னிக்க வேண்டுமென்றும் கேட்க வந்துள்ளீர்கள் அவ்வளவுதானே???

அவ்விருவரும் ஆடிப் போனார்கள் போலும்!

ஓபாபா ஜீ! ஓபாபா ஜீ! எங்களை மன்னிக்கவும்.

இதற்கு மேல், இங்கு நடந்த சம்பவத்தை, எழுத இப்பைத்தியக்காரனும் முடியவில்லை! பேசவும் முடியவில்லை.

அதாவது அவர்கள் வல்லமைகளைக் காட்டி அழைப்பார்கள்.


" ஸித்தர்களால் மயக்க " .

" நீ இங்கிருப்பதால், பிரயோஜனமில்லையென " .

" எங்களிடம் போய்ச் சேர்ந்துவிட்டால், பேரும் புகழும் பெறுவாயென, " .


" எங்கள் சக்திக்கு மிஞ்சிய சாதனை இல்லை என்று அழைப்பார்கள்.

இது அவர்கள் அறியாமையின், அஹங்காரம் ஆகும்.





இந்த ஏழை வைத்தியமோ! ஆத்திரம்! வேகம்!
படபடப்பு! இல்லாமல்! அவர்கள் மனம் புண்படாமல்
எளிமையான வார்த்தையாலும்! இனிமையான முன்
முறுவலாலும்! பணிவான அடக்கத்தாலும்!
அவர்கள் மதிப்பு, மரியாதை, குறைவு படாமலும்!
வருவோம்! வருவோம்! என்றும்,
உங்களைப் போல் ஆக இங்கு தகுதி வேண்டாமா? என்றும்,
நீங்களோ மஹாத்மாக்கள்! யாமோ ஆத்மாதானே? என்றும்,
ஈஸ்வராதிகளிலும், மஹா சக்திமான்கள் நீங்கள்? என்றும்,
யாம் அந்த ஸ்ரீ பகவானைப் போற்றும் பக்தன் தானே? என்றும்,
உங்களைப் போல் சாதனை செய்ய எமக்கு தகுதி இல்லையே? என்றும்;
இன்னமும்; பல நிலைகளை, சுட்டிக்காட்டி பணிவுடன்
நயமாய்! புகழ் சொல்லி அடங்கி விடுவோம் யாம்!
ஆனால் அவர்கள், எம்மேல் அனுதாபம் கொண்டு! இவர்!
நல்லவனாக இருக்கிறான்! நம் போன்று வெளிவர
தயங்குகிறானே! எதையும் வழியில் கொடுத்தாலும் த!
பணிகிறான்! அருள் வாங்க மறுக்கிறானே?



(105)

இவன் மனித ஜன்மா இல்லை

இவன் **என்ன ஜன்மா?** என

இழிவு படுத்தியதும் உண்டு, இவரை!

இவர்! இவனிடம் ஏதோ ஒன்று இருக்கிறது.

அதை நம்மால் அறிய முடியவில்லையென, திகைப்பதும் உண்டு!

இப்படியாக **அக்காலம்** கழிந்துவிட்டது.

இந்த **மெய்** யாத்திரையின் சந்நிதியில்

பழங்கால **ஞானிகளும்,** **ஸத்குரு**

**தக்ஷிணா மூர்த்தியும்** நேரிலாக

**கர்த்தாக்களும்,** மற்றும், மஹிமை

வாய்ந்த, ஸித்தர்கள் & யோகிகள்! சந்நிதியில்

நடந்த, அந்த உரையாடல்கள்! சர்வ சங்க

பரித்யாக மஹிமை! பிரம்மார்ப்பணத்தால் பெறும்

மாறாநிலையாகிய, **ஆத்மஞானம்!**

இவைகளை உடனிருந்து கேட்ட அனுபவத்தாலும்,



(106)

மேட்டூரில் நடந்த, ஸ்ரீமஹான் கோபின் பரீக்ஷையானது, அஹங்கார! அதிகார! ஆதிக்க! அபிமான! மான எண்ணம் இருக்கிறதா? என்றும், இவன் இருக்கிறானா? இவன் இறந்துவிட்டானா? என்ற, சோதனையின் காலமாகும். அவன் சாதனையால் அவனே! அவனே! வென்றனன்

**இவர்** இப்படிப்பட்டவரா? என வியந்தார்கள் போலும்? **அனைவரும்** மாறிவிட்டனர், என்றே சொல்லலாம். முழுமையாக முழு நிறைவுடன் இங்கு வந்த இருவர்க்கும், முடிவாக சொன்ன பதில்?

வைத்தியம்:- எம் ஆத்மானந்த அன்பர்களே!

**யார்** மீதும்! எந்த குறையும் குற்றமும் இல்லை. அன்று அது, எமக்கு நடந்த, ஓர் பலப் பரீட்சையாகும் அது!

**மனம்** அணுவளவேனும் இருக்கிறதா? என்றும்,


**அறிவு** பூரணமாகப் பிரகாசிக்கிறதா? என்றும்,

